உ

கணபதி துணை.

கௌமாரசமயாசாரியாகிய

ஸ்ரீமத்

அருணகிரிநாதர்

அருளிச்செய்த

# கந்தரனுபூதி.

சேந்தமிழ்ப் புத்தகசாலை யதிபர்

பெரியமெட்டு

ஆதிமூலஞ்செட்டியாரால்

சென்னை:

கலாரத்நாகரம் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை பை - 6.

1912.

உ

கணபதிதுணை.

# கந்தரனுபூதி.

காப்பு.

நெஞ்சக்கனகல்லுநெகிழ்ந்துருகத்
தஞ்சத்தருள்சண்முகனுக்கியல்சேர்
செஞ்சொற்புனைமாலைசிறந்திடவே
பஞ்சக்கரவானைபதம்பணிவாம்.

மதயானை அநுசரிக்க.

ஆடும்பரிவேலணிசேவ * லெனப்
பாடும்பணியேபணியாவருள்வாய்
தேடுங்கயமாமுகனைச்செருவிற்
சாடுந்தனியானைசகோதரனே. க

வணங்காரைத் தண்டிக்க.

உல்லாசநிராகுலயோகவிதச்
சல்லாபவிநோதனுநீயலையோ
எல்லாமறவென்னையிழந்தநலஞ்
சொல்லாய்முருகாசுரபூபதியே. உ

* சேவலனை என்றும் பாடம்.

### கல்வியின் மெச்ச.

வானோபுனல்பார்கனன்மாருதமோ
ஞானோதயமோநவினான்மறையோ
யானோமனமோவெனையாண்டவிடந்
தானோபொருளாவதுசண்முகனே. ௩

### துறவுபெற.

வளைபட்டகைமாதொடுமக்களெனுந்
தளைபட்டழியத்தகுமோதகுமோ
கிளைபட்டெழுசூருரமுங்கிரியுந்
தொளைபட்டுருவத்தொடுவேலவனே.

### மாயையை ஒழிக்க.

மகமாயைகளைந்திடவல்லபிரான்
முகமாறுமொழிந்துமொழிந்திலனே
யகமாடைமடந்தையரென்றயருஞ்
சகமாயையுணின்றுதயங்குவதே. ௫

### மாதரைத் தழுவ.

திணியானமனோசிலைமீதுனதாள்
அணியாரரவிந்தமரும்புமதோ
பணியாவெனவள்ளிபதம்பணியுந்
தணியாவதிமோகதயாபரனே. ௬

## தீராப் பிணிதீர.

கெடுவாய்மனனேகதிகேள்கரவா
திடுவாய்வடிவேலிறைதாணினைவாய்
சுடுவாய்நெடுவேதனைதூள்படவே
விடுவாய்விடுவாய்வினையாவையுமே.

## துடிகளைத் தன்வசமாக்க.

அமரும்பதிகேளகமாமெனுமிப்
பிமரங்கெடமெய்ப்பொருள்பேசிய
குமரன்கிரிராசகுமாரிமகன் [வா
சமரம்பொருதானவநாசகனே. அ

## பெண்ணாசை ஒழிக்க.

மட்டூர்குழன்மங்கையர்மையல்வலைப்
பட்டேசல்படும்*பரிசென்றொழிவேன்
தட்டேறவேல்சைலத்தெறியும்
நிட்டூரநிராகுலநிர்ப்பயனே. சூ

## நமனை விலக்க.

கார்மாமிசைகாலன்வரிற்கலபத்
தேர்மாமிசைவந்தெதிரப்படுவாய்

---

* படர் என்றும் பாடம்.

தார்மார்பவலாரிதலாரியெனுஞ்
சூர்மாமடியத்தொடும்வேலவனே. ௧௰

தளிகைசேர்க்க.

கூகாவெனவென்கிளைகூடியழப்
போகாவகைமெய்ப்பொருள்பேசிய
நாகாசலவேலவநாலுகவித் [வா
தியாகாசுரலோகசிகாமணியே. ௧௧

களவுவெல்ல.

செம்மான்மகளைத்திருடுந்திருடன்
பெம்மான்முருகன்பிறவானிறவான்
சும்மாவிருசொல்லறவென்றலுமே
அம்மாபொருளொன்றுமறிந்திலனே.

இருள்வழிகடக்க.

முருகன்றனிவேன்முனிநங்குருவென்
றருள்கொண்டறியாரறியுந்தரமோ
உருவன்றருவன்றுளதன்றிலதன்
றிருளன்றொளியன்றெனநின்றதுவே.

பாத தரிசனஞ்செய்ய.

கைவாய் கதிர்வேன் முருகன் கழ
ல்பெற், றுய்வாய் மனனே யொழிவா

யொழிவாய், மெய்வாய் விழிநா சியொ
டுஞ் செவியாம், ஐவாய் வழிசெல்
லுமவா வினையே. கச

## அட்டாவதானஞ் செய்ய.

முருகன் குமரன் குகனென் றுமொ
ழிந், துருகுஞ் செயறந் துணர்வென்
றருள்வாய், பொருபுங் கவரும் புவி
யும் பரவும், குருபுங் கவவெண் குண
பஞ் சரனே. கரு

## பேராசை விலக்க.

பேராசையெனும்பிணியிற்பிணிபட்
டோராவினையேனுழலத்தகுமோ
வீராமுதுசூர்படவேலெறியுஞ்
சூராசுரலோகதுரந்தரனே. கசு

## தன்னடத்தை மேன்மையாக.

யாமோதியகல்வியுமெம்மறிவுந்
தாமேபெறவேலவர்தந்ததனுற்
பூமேன்மயல்போயறமெய்ப்புணர்வீர்
நாமேனடவீர்நடவீரினியே. கஎ

## கற்பழியாதிருக்க.

உதியாமரியாவுணராமறவா
விதிமாலறியாவிமலன்புதல்வா
அதிகாவநகாவபயாவமரர்
பதிகாவலசூரபயங்கரனே. கஅ

## இல்வாழ்க்கை நீக்க.

வடிவுந்தனமும்மனமுங்குணமும்
குடியுங்குலமுங்குடிபோகியவா
அடியந்தமிலாவயில்வேலரசே
மிடியென்றொருபாவிவெளிப்படினே.

## அநுக்கிரகம்பெற.

அரிதாகியமெய்ப்பொருளுக்கடியேன்
உரிதாவுபதேசமுணர்த்தியவா
விரிதாரணவிக்ரமவேளிமையோர்
புரிதாரகநாகபுரந்தரனே. உ0

## திருவடிவணங்க.

கருதாமறவாநெறிகாணவெனக்
கிருதாள்வனசந்தரவென்றிசைவாய்
வரதாமுருகாமயில்வாகனனே
விரதாசுரசூரவிபாடனனே. உக

தவம்பெற.

காளைக்குமரேசனெனக்கருதித்
தாளைப்பணியத்தவமெய்தியவா
பாளைக்குழல்வள்ளிபதம்பணியும்
வேளைச்சுரபூபதிமேருவையே. உஉ

சலிகைசொல்ல.

அடியைக் குறியா தறியா மையினு
ன், முடியக் கெடவோ முறையோ மு
றையோ, வடிவிக் ரமவேன் மகிபாகு
றமின், கொடியைப் புணருங் குணபூ
தரனே. உ௩

மாதர்வலையில் அகப்படாதிருக்க.

கூர்வேல் விழிமங் கையர் கொங்
கையிலே, சேர்வே னருள்சே ரவுமெ
ண் ணுமதோ, சூர்வே ரொடுகுன் றுதொளைத் தநெடும், போர்வே லபுரந்
தரபூ பதியே. உ௪

மகாவினை ஒழிக்க.

மெய்யே யெனவெவ் வினைவாழ்
வையுகந், தையோ வடியே னலையத்
தகுமோ, கையோ வயிலோ கழலோ

முழுதுஞ், செய்யோய் மயிலே றிய
சேவகனே. உரு

யாருமற்றபேர்க்கு ஆதாரமாக.

ஆதாரமிலேனருளைப்பெறவே
நீதானொருசற்றுநினைந்திலையே
வேதாகமஞானவிநோதமனோ
தீதாசுரலோகசிகாமணியே. உசு

பாக்கியத்தை விதிவழி அனுபவிக்க.

மின்னே நிகர்வாழ் வைவி ரும் பிய
யான், என்னே விதியின் பயனிங் கி
துவோ, பொன்னே மணியே பொரு
ளே யருளே, மன்னே மயிலே றியவா
னவனே. உஎ

தான் அவனுக.

ஆனுவமுதேயயில்வேலரசே
ஞானகரனேநவிலத்தகுமோ
யானுகியவென்னைவிழுங்கிவெறுந்
தானுய்நிலைநின்றதுதற்பரமே. உஅ

கடவுள்முன் கோபமாற்ற.

இல்லேயெனுமாயையிலிட்டனைநீ
பொல்லேனறியாமைபொறுத்திலையே

மல்லேபுரிபன்னிருவாகுவிலென்
சொல்லேபுனையுஞ்சுடர்வேலவனே.

வழக்குப்பேச.

செவ்வானுருவிற்றிகழ்வேலவனன்
றெவ்வாதெனவுணர்வித்ததுதான்
அவ்வாறறிவாரறிகின்றதலால்
எவ்வாறொருவர்க்கிசைவிப்பதுவே.

கடவுள்முன்னிலையில் ஞானம்பெற.

பாழ்வாழ்வெனுமிப்படுமாயையிலே
வீழ்வாயெனவென்னைவிதித்தனையே
தாழ்வானவைசெய்தனதாமுளவோ
வாழ்வாயினிநீமயில்வாகனனே.

கோலைமறுக்க.

கலையேபதறிக்கதறித்தலையூ
டலையேபடுமாறதுவாய்விடவோ
கொலையேபுரிவேடர்குலப்பிடிதோய்
மலையேமலைகூறிடுவாகையனே.

வியாதுலம் ஒழிக்க.

சிந்தாகுலவில்லொடுசெல்வமெனும்
விந்தாடவியென்றுவிடப்பெறுவேன்

மந்தாகினிதந்தவரோதயனே
கந்தாமுருகாகருணாகரனே. ௩௩

பெண்களைத் தாயாகநினைக்க.

சிங்காரமடந்தையர்தீநெறிபோய்
மங்காமலெனக்குவரந்தருவாய்
சங்க்ராமசிகாவலசண்முகனே
கங்காநதிபாலகிர்பாகரனே. ௩௪

சரீரவாஞ்சை ஒழிக்க.

விதிகாணுமுடம்பை விடாவினையேன்
கதிகாணமலர்க்கழலென்றருள்வாய்
மதிவாணுதல்வள்ளியையல்லதுபின்
துதியாவிரதாசுரபூபதியே. ௩௫

கடவுளைக்காண.

நாதாகுமராநமவென்றரனர்
ஓதாயெனவோதியதெப்பொருடான்
வேதாமுதல்விண்ணவர்சூடுமலர்ப்
பாதாகுறமின்பதசேகரனே. ௩௬

தனது அகந்தையை ஒழிக்க.

கிரிவாய்விடுவிக்ரம*வேளிமையோர்
பரிவாரமெனும்பதமேவலையே

* வேலிறையோன் என்றும் பாடம்.

புரிவாய்மனனேபொறையாமறிவால்
அரிவாயடியோடுமகந்தையையே.

பிசாசம் ஒழிக்க.

ஆதாளியையொன்றறியேனையறத்
தீதாளியையாண்டதுசெப்புமதோ
கூதாளகிராதகுலிக்கிறைவா
வேதாளகணம்புகழ்வேலவனே. ௬அ

ஜனனம் எடாதிருக்க.

மாவேழ்சனனங்கெடமாயைவிடா
மூவேடனையென்றுமுடிந்திடுமோ
கோவேகுறமின்கொடிதோள்புணருந்
தேவேசிவசங்கரதேசிகனே. ௬௬

மாயை தெளிய.

வினையோடவிடுங்கதிர்வேன்மறவேன்
மனையோடுதியங்கியமங்கிடவோ
சுனையோடருவித்துறையோடுபசுந்
தினையோடிதணோடுதிரிந்தவனே. ௨௦

நித்தியதேகம் பெற.

சாகாதெனையேசரணங்களிலே
காகாநமனார்கலகஞ்செயுநாள்

வாகாமுருகாமயில்வாகனனே
யோகாசிவஞானொபதேசிகனே. சக

நின்றநிலை நிற்க.

குறியைக்குறியாதுகுறித்தறியும்
நெறியைத்தனிவேலைநிகழ்த்திடலுஞ்
செறிவற்றுலகோடுரைசிந்தையுமற்
றறிவற்றறியாமையுமற்றதுவே. சஉ

ஆசாநிகி அநுக்கிரகிக்க.

தூசா * மணியுந்துகிலும்புனைவா
ணேசாமுருகாநினதன்பருளாள்
ஆசாநிகளந்துகளாயினபின்
பேசாவனுபூதிபிறந்ததுவே. சங

குருமந்திரம் பெற.

சாடுந்தனிவேன்முருகன்சரணஞ்
சூடும்படிதந்ததுசொல்லுமதோ
வீடுஞ்சுரர்மாமுடிவேதமும்வெங்
காடும்புனமுங்கமழுங்கழலே. சச

* வணியும் என்றும் பாடம்.

### கல்வியில் சம்பாஷிக்க.

கரவாகியகல்வியுளார்கடைசென்
றிரவாவகைமெய்ப்பொருளீகுவை
யோ, குரவாகுமராகுலிசாயுதகுஞ்
சரவாசிவயோகதயாபரனே. ௪௫

### மனவருத்தந் தீர.

எந்தாயுமெனக்கருடந்தையுநீ
சிந்தாகுலமானவைதீர்த்தெனையாள்
கந்தாகதிர்வேலவனேயுமையாள்
மைந்தாகுமராமறைநாயகனே. ௪௬

### ஆனந்தநடனங் காண.

ஆறாறையுநீத்ததன்மேனிலையைப்
பேறாவடியேன்பெறுமாறுளதோ
சீறாவருசூர்சிதைவித்திமையோர்
கூறாவுலகங்குளிர்வித்தவனே. ௪௭

### தற்சொரூபங் காண.

அறிவொன்றறநின்றறிவாரறிவிற்
பிறிவொன்றறநின்றபிரானலையோ
செறிவொன்றறவந்திருளேசிதைய
வெறிவென்றவரோடுறும்வேலவனே.

### தன்னை அறிந்துகொள்ள.

தன்னந்தனிநின்றதுதானறிய [வோ
இன்னம்மொருவர்க்கிசைவிப்பது
மின்னுங்கதிர்வேல்விகிர்தாநினைவார்
கின்னங்களையுங்கிர்பைசூழ்சுடரே.

### அவாவறுக்க.

மதிகெட்டறவாடிமயங்கியறக்
கதிகெட்டவமேகெடவோகடவேன்
நதிபுத்திரஞானசுகாதிபவத்
திதிபுத்திரர்வீறடுசேவகனே. ௫௰

### நினைத்தபடி தரிசனங்கொடுக்க.

உருவாயருவாயுளதாயிலதாய் [க்
மருவாய்மலராய்மணியாயொளியாய்
கருவாயுயிராய்க்கதியாய்விதியாய்க்
குருவாய்வருவாயருள்வாய்குகனே.

கந்தரனுபூதி முற்றியது.

---

வேலுமயிலுந்துணை.

திருப்புகழ்க்காரன் திருவடிவாழ்க.

---